**செய்தி வெளியீடு எண்: 67/2023** **நாள்: 24.05.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 வழித்தடம் 3 மற்றும் 5-ல் துணை நிலையம், துணை கட்டிடம் மற்றும் மேற்பார்வை கட்டுப்பாடு மையத்தில் மின்சார பணிக்களுக்கான ஒப்பந்தம் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு ரூ.533.87 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 வழித்தடம் 3 (மாதாவரம் பால்பண்ணை முதல் சோழிங்கநல்லூர் வரை) மற்றும் வழித்தடம் 5-ல் (மாதவரம் பால்பண்னை முதல் சிஎம்பிடி மற்றும் மாதவரத்தில் உள்ள பணிமனை உட்பட) துணை நிலையம், துணை கட்டிடம் மற்றும் மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் அமைப்பிற்கான அனைத்து வகையான மின்சார பணிகளுக்கான ஒப்பந்தம் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு ரூ.533.87 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

மின்சார அமைப்பின் ஒட்டுமொத்த வடிவமைப்பு, தடையற்ற சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பான, நம்பகமான மற்றும் நிலையான மின்சாரம், அத்துடன் திறமையான மின் அமைப்பின் செயல்திறன் ஆகியவற்றை வழங்குவதை மையமாகக் கொண்டுள்ளது. வழித்தடம் 3-ல் 29 சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் 10 உயர்மட்ட மெட்ரோ இரயில் நிலையங்கள், வழித்தடம் 5-ல் 6 சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் 11 உயர்மட்ட மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மாதவரம் பணிமனை இதில் அடங்கும்.

இந்த ஒப்பந்தம் லார்சன் & டூப்ரோ நிறுவனத்திற்கு ரூ. 533.87 கோடி மதிப்பில் வழங்கப்பட்டது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் ஒப்பந்த துணை மின்நிலைய வணிகப் பிரிவின் தலைவர் ஹெச். ராஜேந்திரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் லார்சன் & டூப்ரோ நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த நிகழ்வின் போது உடனிருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**